**மேற்கோள் விளக்கக் கதை அகரவரிசை (முதல் பகுதி)**

1. **அகத்தியர் கதை**




அகத்தியர் என்பவர் முனிவர்களில் சிறந்தவர். குடம் ஒன்றில் இவர் தோன்றியபடியால் இவரைக் குடமுனி என்றும் கூறுவர். இவருடைய பெருமை சிவபெருமானாலும் மதிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது. இவர் திருமாலையும் சிவபெருமானாக செய்துவிட்டார். அவ்வாறு செய்யப் பட்ட திருப்பதிதான் திருக்குற்றாலம். இந்திரன் வேண்டுகோளின் மீது ஒரு காலத்தில் கடலையும் குடித்து தீர்த்தார். அந்நாளில் சிவ பெருமானுக்கும் உமாதேவிக்கும் திருக்கைலையில் திருமணம் நடைபெற்றது. முனிவர்களும் தேவர்களும் ஒருங்கே திருக்கைலையில் குழுமினர். அதனால் நிலவுலகின் வடகோடு சாய்ந்தது. தென்கோடு உயர்ந்தது. தேவர்களும் முனிவர்களும் அஞ்சினர். சிவபெருமான் உலகத்தைச் சமப்படுத்த எண்ணினார். பெருமையில் சிறந்த அகத்திய முனிவரைப் பார்த்து. 'நீ பொதிய வரையில் போய் தங்கு அவ்வாறு போய்த் தங்குவாயானால் உலகம் சரியான நிலையில் நிற்கும்' என்று கூறி இவரைப் பொதியமலைக்கு அனுப்பினார். இவரும் பொதிய மலையை அடைந்து தங்கினார். உலகமும் பண்டுபோல் சமமாக அமைந்து நின்றது. இதனைக் கண்டு அமைவரும் அகத்திய முனிவருடைய பெருமையைப் பெரிதும் வியந்து கொண்டாடினர். இதனால் துறவிகளுடைய பெருமை அளவிடற்கரியது. அவர்களுடைய பெருமைக்கு ஒப்புக்கூறத் தொடங்கினால் அஃது உலகத்திலே இறந்தவர்கள் இவ்வளவு பெயர் என்று எண்ணியறிய முயல்வ தனோடொக்கும் என்று அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

(துறவிகள் பெருமை)